அ.வ.எண்: 22/2018 நாள்: 26.09.2025

வா.சா.1 – பொன்னரியாள்

சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

சாட்சியின் ஆதார் அட்டை சரிபார்க்கப்பட்டது.

<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

1. 28.04.1992ம் தேதி காரைக்குடி நத்தம் நிலவரித்திட்டம், தனிவட்டாட்சியர் வாதிகளின் முன்னோர் வீராச்சாமிக்கு வழங்கிய படிவம் 1 மற்றும் படிவம் 3–ன் படி 12.08.1992–ல் பட்டா அறிவிப்பு மற்றும் பட்டா வழங்கிய உத்தரவு எண்ணம் – 2 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
2. 28.08.1992ம் தேதி வீராச்சாமி பெயரில் பட்டா எண் 388, தாவா நிலத்திற்கு வழங்கப்பட்ட பட்டா வரைபடத்துடன் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
3. 31.10.2017ம் தேதி முப்பையூர் குரூப். கிராம நிர்வாக அதிகாரி வாதிகளுக்கு வழங்கப்பட்ட வீராச்சாமி பெயரில் உள்ள பட்டா எண் 338–க்கான துாய அடங்கள் பதிவேடு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
4. 2015–2016 ம் ஆண்டைய வீராச்சாமி பெயரில் உள்ள வீட்டுவரி ரசீது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
5. 10.02.2015ம் தேதி வீராச்சாமி இறப்புச்சான்று சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
6. 15.05.2016ம் தேதிய வீராச்சாமியின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
7. 07.11.2017ம் தேதிய தாவா இடத்தை சர்வேயர் மூலம் அளவை செய்ய 1ம் வாதி தேவகோட்டை வட்டாட்சியருக்கு அளித்த மனு ரூ.200/– க்கான கருவூல சலான் மற்றும் வட்டாட்சியரின் உத்தரவு எண்ணம் – 3 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.
8. 31.08.2017ம் தேதிய தேவகோட்டை வட்டார வளர்ச்சி அதிகாரி 1ம் வாதி பெயருக்கு அரசு பசுமை வீடு திட்டத்தில் வீடு கட்டுவதற்கு வழங்கப்பட்ட உத்தரவு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. 10.11.2017ம் தேதிய 1ம் வாதி தேவகோட்டை வட்டார காவல் நிலையத்தில் பிரதிவாதிகள் மீது அளிக்கப்பட்ட புகார் மனு சான்றிட்ட நகல் வா.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. 20.11.2017ம் தேதிய 1ம் வாதி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் பிரதிவாதிகள் மீது அளிக்கப்பட்ட புகார் மனு மற்றும் புகார் மனு ஏற்புச் சான்றிதழ் நகல் வா.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11. 20.11.2017ம் தேதிய 1ம் வாதி தாவா இடத்திற்கு சமூகம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்ட கேவியட் மனு COP 53/17 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

12. 22.11.2017ம் தேதிய கேவியட் மனுவை பிரதிவாதிகள் பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அஞ்சல் அட்டை எண்ணம் –3 சான்றிட்ட நகல் வா.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. வாதிகள் வீட்டிற்கு வீராச்சாமி பெயரில் செலுத்திய மின் கட்டண ரசீது சான்றிட்ட நகல் வா.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>குறுக்கு விசாரணை:</u>

1, 2 தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.